# ஜெபிக்கும் உனக்கு பதிலுண்டு

## ஹலோ குட்டீஸ் நல்லாயிருக்கீங்களா!
## உங்கள் அனைவருக்கும் குழந்தைகள் தின நல்வாழ்த்துக்கள்.

யாழினியும், ரத்னாவும் Friends, யாழினி யாருடனும் அதிகம் பேசமாட்டாள், ரத்னாவோ பேசிக் கொண்டேயிருப்பாள். ஒருநாள் பள்ளியில் எப்பவும் கலகலப்பாக பேசும் ரத்னா, சோகமாக உட்கார்ந்திருப்பதைப் பார்த்த யாழினி, ஏன் ரத்னா சோகமாக உட்கார்ந்திருக்க, என்ன ஆச்சு முடியலையா? எனக் கேட்டாள். ரத்னாவோ உடம்புக்கெல்லாம் ஒன்னும் இல்லப்பா, எங்க வீட்டுல அம்மாவுக்கும், அப்பாவுக்கும் ஒரே சண்டை. அம்மா சண்டையில பிள்ளையும் வேண்டாம் ஒன்னும் வேண்டாம்னு ஊருக்குப் போயிட்டாங்கன்னு சொல்லி அழுதாள். அவளுடைய அழுகையை நிறுத்த முடியவில்லை, யாழினி சொன்னாள் வா, நம்ம இரண்டுபேரும் இயேசப்பாகிட்ட ஜெபம் பண்ணுவோம், நிச்சயம் அம்மா வந்திருவாங்க அழாதப்பான்னு அவள், கையைப் பிடித்து ஜெபம் பண்ணினாள். என்ன ஆச்சரியம் தெரியுமா? அவுங்க அம்மா இரண்டே நாளில வீட்டுக்கு வந்துட்டாங்கன்னு ரத்னா, சந்தோஷமா வந்து யாழினியிடம் சொன்னாள். இரண்டு பேரும் சேர்ந்து இயேசப்பாவுக்கு நன்றி சொன்னாங்க. ஆம் நிஜமாவே நீங்க கூட உங்க அம்மா, அப்பாவுக்காக, Friends-க்காக, தேசத்திற்காக ஜெபம் பண்ணினா உங்க ஜெபத்திற்கும் இயேசப்பா பதில் தருவாங்க. யாழினி மாதிரி உங்க Friends கிட்டேயும், ஏன் சோகமா, சோர்வா இருக்கிறன்னு விசாரிச்சு ஜெபம் பண்ணுவீங்களா?

பாபிலோன் என்னும் நாட்டு ராஜா, தனக்கு வந்த கனவையே மறந்திட்டாரு. ஆனா அந்த கனவினால ரெம்பவோ கலங்கிப் போயிருந்தாரு, அதனால அங்கேயிருக்கிற எல்லா ஞானிகளையும் அழைத்து என் கனவையும் சொல்லி, அதற்கான விளக்கத்தையும் சொல்லுங்கன்னு சொன்னாரு. அந்த நாட்டு ஞானிகள் கனவைச் சொல்லுங்கள் ராஜா, நாங்கள் விளக்கம் சொல்லுகிறோம் என்றார்கள். ராஜாவோ கனவையும், விளக்கத்தையும் சொன்னால் பரிசுகளைத் தருவேன். இல்லைன்னா, எல்லாரையும் கொன்றுபோட தன்னுடைய அதிகாரிக்கு கட்டளை போட்டுட்டார். அந்த நேரத்தில் தான் ஆண்டவருடைய பிள்ளைகளாகிய தானியேலும், அவருடைய நண்பர்களும் கைகோர்த்து, ஆண்டவரே, இந்த ராஜா எங்களை அழிக்காதபடி எங்களைக் காத்துக் கொள்ளும் என்று ஜெபம் பண்ணினாங்க, ஆண்டவர் அவர்கள் ஜெபத்தைக் கேட்டு, அவர்களின் உயிரைக் காப்பாற்றினார். என்ன குட்டீஸ் நீங்களும் உங்க Friends-ஸோடு சேர்ந்து ஜெபிக்கப் போறீங்க தானே.... Very Good, Ok Bye ...... குட்டீஸ்

### ஜெபம்

அன்புள்ள இயேசப்பா, நானும் இனிமே என் Friends-ஸோட கஷ்டங்கள் தீருவதற்காகவும், அவர்களோடு சேர்ந்து எங்க தேசத்திற்காகவும் ஜெபிக்கப் போறேன். எங்க ஜெபத்தைக் கேளுங்க. இயேசப்பா, எங்க நாட்டுத் தலைவர்களை, மக்களை காத்துக் கொள்ளுங்க. இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

### மனப்பாட வசனம்

உங்களில் இரண்டு பேர் தாங்கள் வேண்டிக் கொள்ளப் போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும், பூமியில் ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும்.
மத் 18:19.

